

செபக் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டத் திருத்தந்தையின் செப மன்றாட்டுக்கள் - 2027

சனவரி

இறைவேண்டலின் ஆற்றலைக் கண்டுணர

திருஅவையில் இருக்கும் ஒவ்வொருவரும் இறைவேண்டலின் ஆற்றலை ஆண்டவரை எதிர்கொள்ளும் தனிப்பட்ட அனுபவமாகக் கண்டுணர்ந்து, நம்முடைய உள்ளங்களையும் உலகையும் மாற்றிட மன்றாடுவோம்.

பிப்ரவரி

பிறர் நலனில் அக்கறை கொள்பவரின் நலனுக்காக

பிறரின் முழுமையான நலனில் அக்கறையுடன் செயல்படுபவர்கள் தங்களுக்குத் தேவையான ஆதரவைப் பெறவும், பொறுமை, ஞானம், துணிவு இவற்றுடன், அவர்கள் அகக்குணமாக்கல் மற்றும் எதிர்நோக்குக்கு வழியைத் திறக்க மன்றாடுவோம்.

மார்ச்

மனித வாழ்வின் மாண்பு மதிக்கப்பட

உற்பத்தித்திறன் மற்றும் உடனடிப் பயன்களில் கவனம் செலுத்தும் பண்பாட்டில், நம்முடைய மற்றும் பிறருடைய தனித்துவமான மாண்பைக் கண்டறிந்து பாராட்ட மன்றாடுவோம்.

ஏப்ரல்

மனிதராக்கும் கொடையாகக் கலை திகழ்ந்திட

நம்மை மனிதப் பண்புடையவராக்கி, உற்சாகப்படுத்தி, படைப்பில் உள்ள இறைவனின் அழகைக் கண்டடைய உதவும் உண்மையான கொடையாகக் கலை உணரப்பட மன்றாடுவோம்.

மே

ஒவ்வொருவரும் வேலை வாய்ப்புகள் பெற்றிட

தொழில்நுட்ப வளர்ச்சி கண்ணியமான வேலை வாய்ப்புகளைத் தந்திடவும். தலைமுறைகளுக்கிடையேயான ஒத்துழைப்பால் ஒவ்வொருவரும் தங்கள் திறமைகளைப் பொது நன்மைக்காக அர்ப்பணிக்கும் எதிர்காலத்தைக் கொணரவும் மன்றாடுவோம்.

ஜூன்

செயற்கை நுண்ணறிவின் நற்பயன்பாட்டிற்காக

செயற்கை நுண்ணறிவு மனித மாண்புக்கு உதவும் வகையில் மேம்படுத்தப்படவும், அதை நாம் எவ்வாறு விவேகத்துடன் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்திடவும் மன்றாடுவோம்.

ஜூலை

பெற்றோரின் பெற்றோர் மற்றும் மூத்தோர்களுக்காக

தாத்தா, பாட்டி மற்றும் மூத்தோர்களிடம் உள்ள இறைநம்பிக்கை மற்றும் ஞானம் என்னும் கருவூலத்தைத் திருஅவையின் உறுப்பினர்கள் எப்போதும் பாராட்டி, அவர்களுடைய அனுபவங்களிலிருந்து மனமுவந்து கற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

ஆகஸ்ட்

இளையோரின் இறையழைத்தலுக்காக

இறையழைத்தலுக்கான தங்களது தேடலின் பாதையில், இதயங்களைத் திறந்து உறவாடும் உற்ற தோழராக இயேசு கிறித்துவை இளையோர் கண்டுணர மன்றாடுவோம்.

செப்டம்பர்

ஒருங்கிணைந்த சூழலியல் மாற்றத்திற்காக

படைப்புடனான புதிய உறவில் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டு, நீதியுடன் அதைப் பாதுகாத்து, அதைத் தியானித்து, இணக்கமும் நன்றியுணர்வும் நிறைந்த வாழ்வுக்கான பாதையைக் கண்டடைய மன்றாடுவோம்.

அக்டோபர்

கிறித்தவக் குழுமங்களுக்காக

நற்செய்திப் பணிக்கான புதிய சீடர்களை உருவாக்கும் திருத்தூதுப் பணியின் நீட்சிக்கான மையமாக ஒவ்வொரு பங்குத்தளமும், பங்குக் குழுமமும் திகழ்ந்திட மன்றாடுவோம்.

நவம்பர்

புலம்பெயர்ந்தோரின் ஒருமைப்பாட்டிற்காக

சொந்த மண்ணிலிருந்து வேரறுக்கப்பட்ட புலம்பெயர்ந்தோரும் இடம்பெயர்ந்தோரும் தங்கள் பயணத்தில் திருக்குடும்பத்தின் உடனிருப்பையும் ஆறுதலையும் பெற்று, மாண்பு, தோழமை, உண்மையான ஒருமைப்பாடு ஆகியவற்றுடன் தங்களை வரவேற்கும் குழுமங்களைக் கண்டடைய மன்றாடுவோம்.

டிசம்பர்

குடும்பங்களின் கிறிஸ்தவ அழைத்தலுக்காக

கிறிஸ்தவக் குடும்பங்கள் நற்செய்தியின் வாழும் சாட்சிகளாகச் சமூகத்தில் திகழவும், இறைநம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் தளமாக எவ்வாறு திகழ வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளவும் மன்றாடுவோம்.